# UNIT - IV

Sub Name - மொழியியல்

class - I MA Tamil

code - GETA 15 A

# 8. தொடரியல்

மக்கள் தம் அன்றாட வாழ்க்கையில் மொழியைப் பயன்படுத் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்கிறார்கள். இத்தகைய கருத் பரிமாற்றத்தில் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள், உரைக்கோ என்பவை ஏதேனும் ஒரு வடிவில் இடம் பெறுகின்றன. இத்தகை மொழியமைப்பையும் பயன்பாட்டையும் நுணுகிப் பார்க்கும்போது, அவற் தெளிவான ஓர் ஒழுங்கமைப்பு அமைந்திருக்கக் காண்கிறோம். அதாவ சொற்களும் சொல்லமைப்புகளும் தொடர்களாக முதலில் அமைந்து, பின் வாக்கியங்களாக அமைகின்றன. இவ்வமைப்பே, தொடரமைப்பு என் வாக்கிய அமைப்பு என்றும் அழைக்கப்படுகிறது. தொடர் என்பது அலகாகவும் அடிப்படை விளக்கக் கூறாகவும் செயல்படுவதால், இவ்விளக் தொடரியல் விளக்கம் (syntactic description) எனப்படுகிறது. இத வெளிப்படுத்தும் இயல் தொடரியல் (syntax) என்று பெயர் பெறுகிறது.

சொற்களும் சொல்லமைப்புகளும் தனித்தனியாக பொருண்மை உணர்த்தினாலும் அவை ஒன்றொடொன்று தொடர்புபடுத்தப் நிலையில்தான் பொருண்மை வெளிப்பாடு தெளிவாகவும் உரிய முறையி அமையும். எனவே, தொடரில் இவ்வாறு, சொற்கள், சொல்லமைப்புகள் அமை முறையே தொடர் முறை (order) எனப்படுகிறது.

இவற்றுள் சில உறுப்புகள் மிக நெருங்கிய தொடர்பு கொண் அமைவதால் அவற்றை அண்மைறுப்புகள் (immediate constitue என்கிறோம். மேலும், இவ்வாறு வழங்கும் சில உறுப்புகளுக்கு இடை இலக்கண அமைப்பில் இயைபு காணப்படும். இத்தகைய இயைபு தொடரிl (concrod) எனப்படுகிறது.

மேலும், இத்தகைய இயைபு பொருண்மை வெளிப்பாட்டிற்கும் இலக்க ஒழுங்கமைவிற்கும் மிகவும் தேவையானதாகவும் அமைந்து வருகிறது.

தொடக்ககால தொடரியல் விளக்கம் அண்மையுறுப்புக் கோட்பா மையமாகக் கொண்டே அமைந்திருந்தது.

## அண்மையுறுப்பு

ஒரு மொழியில் சொற்கள் சங்கிலிக் கோர்வை போல் அமைந்து பொருள் தருகின்றன. இக்கோர்வையே உறுப்பி (constitute) எனப்படுகிறது. ஒவ்வோர் உறுப்பிமிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் உண்டு. அந்தச் சிறிய பையன் என்ற தொடர் ஓர் உறுப்பியாகும். இதில் அந்த சிறிய, பையன் என்ற மூன்று உறுப்புகள் உள்ளன. உறுப்புகள் சேர்ந்து உறுப்பியாக அமையும் முறையை அமைப்பு (structure) எனலாம். நேரடித் தொடர்புடைய உறுப்புகளையே ஓர் உறுப்பியின் அண்மையுறுப்புகளாகக் கொள்வர்.

அந்தப் பையன் பால் குடித்தான்

என்ற தொடரில் பால் குடித்தான் என்பது நெருங்கிய தொடர்புடைய அண்மையுறுப்பாகும். அதே போல் அந்தப் பையன் என்பதும் நெருங்கிய தொடர்புடையது. பையன் பால் என்றோ அந்த குடித்தான் என்றோ பிரித்தால் பொருள் மாறுபடும். இந்தத் தொடரில் அந்தப் பையன் என்பதற்குப் பதிலாக இராமன் கண்ணன் என்ற பெயர்களைப் பதிலியாகப் பயன்படுத்தலாம்.

## அண்மையுறுப்பின் வகைள்

அண்மைறுப்பினை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

1. இடைவிடாத அண்மைறுப்பு (constinuous IC)
2. இடைவிட்ட அண்மையுறுப்பு (discontinuous IC)
3. பல்நிலை அண்மைறுப்பு (multiple IC)
4. இணைந்தியல் அண்மைறுப்பு (simultaneous IC)
5. மயக்கும் அண்மையுறுப்பு (ambiguous) போன்றவை.

## இடைவிடாத அண்மையுறுப்பு

இரண்டு அண்மைறுப்புகளும் தொடர்ச்சியாக அமைந்து பொருள் தருவது இடைவிடாத அண்மையுறுப்பு எனப்படும்.

எ.கா.

இராமன் சென்றான்
வள்ளி ஓடினாள்

## இடைவிட்ட அண்மையுறுப்பு

இரண்டு உறுப்புகளும் தொடர்ச்சியாக அமையாமல் இடைவிட்டு அமைவதால் இப்பெயர் பெற்றது. எல்லாம் என்பதில் எல்லா + உம் இணைந்து உள்ளன.

எல்லா மாணவர்களும்

இவ்வண்மையுறுப்பு தொடர்களின்வாயிலாக எல்லா கருத்துகளையும் விளக்க முடியாது. தனி வாக்கியத்தில் மட்டுமே இதனை விளக்க முடியும். ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியங்கள் வரும்போது இந்த அண்மையுறுப்புப் பகுப்பு செயல்படுவதில்லை. ஆகவே அதற்கு மேலும் நமக்கு ஓர் இலக்கணம் தேவைப்படுகிறது.

### தொடரிலக்கணம்

ஒரு மொழியில் வழங்குகின்ற சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் போன்றவை ஏதேனும் ஒரு பொருண்மையை வெளிப்படுத்துகின்றன. அவ்வாறு வெளிப்படுத்தும் பொருளானது ஏதேனும் ஒரு முறைமையினைக் கொண்டு விளங்குகிறது.

1. நீ வா

இதில் எழுவாய், பயனிலை என்ற இரு கூறுகள் அமைந்துள்ளன. இதனை விரிவாக விளக்கலாம்.

| | | |
|---|---|---|
| தொடர் | → | பெ.தொ + வி.தொ |
| பெ.தொர | → | பெயர் (நீ) |
| வி.தொ | → | ஏவல் வினை (வா) |

2. **அவன் மரத்தை வெட்டினான்**

இத் தொடர்களில் எழுவாய் செயப்படுபொருள் பயனிலை என்ற மூன்று கூறுகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| பெ.தொ | → | அவன் |
| வி.தொ | → | மரத்தை + வெட்டினான் |
| செய.பொ | → | மரத்தை |
| வே. | → | மரம் + அத்து + ஐ இரண்டாம் வேற்றுமை |
| வி.மு. | → | வெட்டினான் |

இது ஓர் அடிப்படையான வாக்கியமாகும். இதனைக் கொண்டு பல்வேறு வாக்கியங்களை உருவாக்கலாம்.

### வாக்கிய வகைகள்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வாக்கியங்களாக அமைகின்றன. வாக்கியங்களை

1) தனி வாக்கியம் (simple sentence)
2) கூட்டு வாக்கியம் (compound sentence)
3) கலவை வாக்கியம் (complex sentence)

என மூன்றாகப் பிரிக்கலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள பயனிலை பெயர்த்தொடர்களில் பெயருக்கு முன்னர் சில உறுப்புகள் வருகின்றன. எடுத்துக்காட்டாக பெரிய, நல்ல என்ற பெயரடைகளும், ஒரு என்ற எண்ணும் பெயரடையும் வருகின்றன. அதாவது பெயர்த்தொடரை விரிவுப்படுத்தி விளக்கும்போது பெயருக்கு முன்னர் சில உறுப்புகள் இடம்பெறுவதைப் பார்க்கிறோம். அவை பெயரடைகளாக இருக்கின்றன. பெயரடைகளுக்குள் வேறுபாடு இருக்கும்.

எ.கா.

நல்ல

பெரிய + பள்ளிக்கூடம்

ஒரு

பெயரடைகள் கட்டாயமல்லாத கூறுகளாக விளக்கப்படுகின்றன. இத்தகைய அடைச்சொற்களுக்கு முன்னர் அவற்றின் பண்பினைக் கூட்டிக்காட்டும் உறுப்புகள் வருகின்றன. இவ்வுறுப்பு அடைச்சொல் இருந்தால் மட்டுமே இடம் பெறும்.

அது பள்ளிக்கூடம்

அது பெரிய பள்ளிக்கூடம்

அது மிகப் பெரிய பள்ளிக்கூடம்

(மிக) + (பெரிய) + பள்ளிக்கூடம்

ஆகவே பெயர்த்தொடரில் பெயர் கட்டாயமாக அமைய வேண்டிய உறுப்பு. பெயரடையும் பெயர்ப்பண்பு காட்டும் உறுப்பும் கட்டாயமல்லாதவை. இடம் பெற்றும் பெறாமலும் அமையலாம். இவை மிக, பெரிய என்ற ஒழுங்கு வரிசையில் மட்டுமே வரக்கூடியவை இதனை மாற்ற முடியாது. இதே போன்று எழுவாயில் இடம்பெறும் பெயர்தொடரிலும் பெயருக்கு முன்னர் சில உறுப்புகள் வந்தமையும், அவையும் மேற்குறிப்பிட்டது போலவே பெயரடையினையும் பெயரின் பண்பினைக் காட்டும் உறுப்பினையும் பெற்று விளக்கும்.

எ.கா.

ஆசிரியர் வந்தார்

இதில் ஆசிரியர் என்பது எழுவாய் (பெயர்த்தொடர்) இத்தொடரில் ஆசிரியர் என்பதற்கு முன்னர் சில உறுப்புகள் வரும்.

கா.

அந்த ஆசிரியர்

நல்ல ஆசிரியர்

ஓர் ஆசிரியர்

உயரமான ஆசிரியர்

மிக நல்ல ஆசிரியர்

கணக்கு ஆசிரியர்

இவற்றில் எங்கள் அசிரியர் என்பதற்கு முன்னர் வரும் பெயரடைகள் கட்டாயமல்லாதவை. இவையில்லாமலும் பெயர்த்தொடர் இயங்கும். இதற்கு முன்னர் வரும் பெயரடைகளுள் வேறுபாடுகள் வரும். இப்பெயரடைகள் சிலவற்றிற்கு முன்னர் மிக என்ற இடைச்சொல் வரும். இவ்விடைச் சொல்லும் பெயரடையும் அண்மையுறுப்புகள். ஆகவே, ஒன்றையடுத்தே மற்றவை வரும். அத்தகைய அமைப்பில் இடைச்சொல்லும் பெயரடையும் கட்டாய உறுப்புகள். ஆக, தமிழ்மொழியிலுள்ள பெயர்த் தொடரில் குறைந்தது மூன்று உறுப்புகள் இடம் பெறுகின்றன. இவற்றோடு, 6ஆம் வேற்றுமை அமைப்பும் பெயர்ப் பயனிலையில் இடம் பெறும்.

எ.கா.

அது புத்தகம்

அது என்னுடைய புத்தகம்

இங்கு என்னுடைய என்பது ஆறாம் வேற்றுமையமைப்பாகும். இத்தகைய தொடரமைப்போடு ஒன்றுக்கு மேற்பட்ட பெயரடைகளும் வரும்.

அந்தப் பெரிய மரம்

பெ.தொ → பெ.

→ பெ.அ + பெ

→ பெ.அ.இ.நி. + பெ.அ + பெ.

→ பெ.அ + பெ.ஆ2 + பெ.

→ ஆ.வே. + பெயர்

வாக்கியத்திலுள்ள அடுக்குத் தொடர் வினைத்தொடர் இதனோடு சில இலக்கண உறுப்புகள் தொடரில் வந்தமைகின்றன.

இராமன் ஒரு கேள்வியைக் கேட்டான்

இதில் செயப்படுபொருளுக்கு முன்னர் பெயரடை வந்திருப்பதைப் பார்க்கிறோம். இவ்வாறு வரும் வினைத்தொடர் பல்வேறு விதிகளாக விளக்கப்படுகிறது.

வி.தொ.

| | | |
|---|---|---|
| வி.தொ | → | வி.மு. |
| வி.தொ. | → | வி.அ. + வி.மு. |
| வி.தொ. | → | வி.அ$_1$ + வி.அ$_2$ வி.மு. |
| தொ | → | வே.அ$_1$ + வே.ஆ$_2$ + வி.மு. |
| வி.தொ | → | இ.நி. + வி.அ + வி.மு. |

ஒவ்வொரு தொடர் விளக்கத்தின் கீழும் இது போன்ற விதிகள் அமைந்து ஒன்றன்பின் ஒன்றாக இயங்கி, குறிப்பிட்ட தொடரை அமைக்க வல்லவை. இவ்வெல்லா விதிகளும் இணைந்த விளக்கமே தொடரிலக்கணத்தின் (phrase structure grammer) விளக்கமாகும்.

**சொற்கள்**

தொடரிலக்கணத்தில் ஒரு பகுதியாக மொழியில் இடம் பெறும் சொற்கள், சொற்களஞ்சியம் (டநஓைஉடிே) என்ற பிரிவில் வரையறை செய்து கொடுக்கப்பட்டிருக்கும்.

**சொற்கள்**

தொடரில்க்கணத்தில் ஒரு பகுதியாக மொழியில் இடம் பெறும் சொற்கள், சொற்களஞ்சியம் (lexicon) என்ற பிரிவில் வரையறை செய்து கொடுக்கப்பட்டிருக்கும்.

எ.கா.

ஒடு என்ற சொல்

(+V+pp.)

படி என்ற சொல்

(+V+pp-)

மாடு என்ற சொல்

(+N+NP)

நல்ல என்ற சொல்

(Ad; NI)

## அக அமைப்பு

'அது நான் அந்த படத்தை பார்த்தேன் நல்லபடம்' என்ற அக அமைப்பு நமக்குக் கிடைக்கிறது. சில மாற்றல் விதிகளைப் பயன்படுத்தி இதிலிருந்து புற அமைப்பைப் பெற முடிகிறது.

**மாற்றல் விதிகள்**

1) படத்தை → படம்
படத்தை → φ

**நீக்கல்விதி**

2) பார்த்தேன் → பார்த்த
விமு. → பெ.எ.

3) சு.அ. → φ


மாற்றல் விதிகளின் இயக்கத்திற்குப் பிறகு

அது நான் பார்த்த நல்ல படம் என்ற புறா வடிவம் / புற அமைப்பு கிடைக்கிறத.

**எ.கா.**

1) இராமன் வந்தான் 2) கண்ணன் வந்தான்

→ இராமனும கண்ணனும் வந்தார்கள்




**சேர்த்தல் விதி**

1) பெ.தொ$_1$ + உம் + பெ.தொ$_2$ + உம்
இராமனும் கண்ணனும்

2) வி.தொ$_1$ + வி.தொ$_2$
வந்தான் + வந்தான் – வந்தார்கள்

பெறப்பட்ட வடிவம் 'இராமனும் கண்ணனும் வந்தார்கள்'

மாற்றல் விதிகள் இயல்பாக அமைந்தாலும் அவை இயங்கும்பொழுது அவற்றிற்கெனச் சில வரையறைகள் உண்டு. கட்டுப்பாடுகள் உண்டு.

நான் நேற்று போனேன்.

என்ற வாக்கியம்

**நேற்று நான் போனேன்.**

என இயல்பாக மாறும். இது ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால், நேற்று போனேன் நான் என்ற மாற்றம் இயல்பானதல்ல. இத்தகைய தொடரமைப்பு சில சமயங்களில் பொருட் குழப்பத்தை உண்டாக்கும். இதற்குக் காரணம் வினைமுற்று இயல்பாக அமைவது மரபு. இந்தக் கட்டுப்பாட்டை மீறும்போது கருத்துப் பரிமாற்றம் தடைப்படும்.

**புலி கொல் யானை**

என்ற தொடருக்குப் புலி யானையைக் கொன்றது என்றும் யானை புலியைக் கொன்றது என்றும் இரு பொருள்கள் உண்டு. இவ்விரண்டு புற அமைப்புகள் கிடைக்க வெவ்வேறு மாற்றல் விதிகள் தேவைப்படுகின்றன. அதாவது இவற்றைப் பெறுவதற்கு இரு அக அமைப்புகள் தேவைப்படுகின்றன. இவ்வக வாக்கியங்களே வாக்கியங்களைப் பெறுவதற்கான கட்டுப்பாடுகளாகவும் அமைகின்றன. சில மாற்றல் விதிகளின் அக அமைப்பில் இடம் பெறும் ஒரே மாதிரியான சொற்கள் இரண்டும் ஒருமை வினைமுற்றுகள். இவற்றில் ஒன்று நீக்கப்படுவதற்கும் இரண்டும் சேர்ந்து பன்மையாக்கப்படுவதற்கும் அவ்வக அமைப்புகளிலுள்ள எழுவாய்த் தொடர் காரணமாக அமைகிறது.

**இராமன், கண்ணன் வந்தான் வந்தான்**

என்ற அக அமைப்பு உம் சேர இராமனும் கண்ணனும் என்றாகி, பின்னர் வந்தான் + வந்தான் என்ற வடிவம் இரண்டும் சேர்ந்து வந்தார்கள் என்ற வடிவம் பெற்று, தேவையான புற வடிவம் கிடைக்கிறது. (ஏனெனில் எழுவாய்த் தொடரில் இரண்டு எழுவாய்கள் இருப்பதால் வினைமுற்று பன்மையாக்கப்பட வேண்டும்)

## மாற்றிலக்கணத்தில் பொருண்மையின் பங்கு

மாற்றிலக்கணத்தில் அமையும் பிரிவுகளுள் தொடரிலக்கணம் சொற்களஞ்சியம் அகபுற அமைப்புகள், மாற்றல் விதிகள் போன்றவை மிக முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் தம்முள் நெருங்கிய தொடர்பு கொண்டவை. இத்தொடர்புகளை விளக்கும்போது நமக்குப் பொருண்மை பற்றிய விளக்கம் கிடைக்கிறது. தொடக்க காலத்தொடரியல்

## அக அமைப்பு

'அது நான் அந்த படத்தை பார்த்தேன் நல்லபடம்' என்ற அக அமை நமக்குக் கிடைக்கிறது. சில மாற்றல் விதிகளைப் பயன்படுத்தி இதிலிருந் அமைப்பைப் பெற முடிகிறது.

### மாற்றல் விதிகள்

1) படத்தை → படம்
படத்தை → φ

### நீக்கல்விதி

2) பார்த்தேன் → பார்த்த
வி.மு. → பெ.எ.

3) க.அ. → φ


மாற்றல் விதிகளின் இயக்கத்திற்குப் பிறகு

அது நான் பார்த்த நல்ல படம் என்ற புறா வடிவம் / புற அமை கிடைக்கிறத.

**எ.கா.**

1) இராமன் வந்தான் 2) கண்ணன் வந்தான்

→ இராமனும கண்ணனும் வந்தார்கள்




### சேர்த்தல் விதி

1) பெ.தொா$_1$ + உம் + பெ.தொா$_2$ + உம்
இராமனும் கண்ணனும்

2) வி.தொ$_1$ + வி.தொ$_2$
வந்தான் + வந்தான் – வந்தார்கள்

பெறப்பட்ட வடிவம் 'இராமனும் கண்ணனும் வந்தார்கள்'

மாற்றல் விதிகள் இயல்பாக அமைந்தாலும் அவை இயங்கும்பொழுது அவற்றிற்கெனச் சில வரையறைகள் உண்டு. கட்டுப்பாடுகள் உண்டு.

நான் நேற்று போனேன்.

என்ற வாக்கியம்

**நேற்று நான் போனேன்.**

என இயல்பாக மாறும். இது ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால், நேற்று போனேன் நான் என்ற மாற்றம் இயல்பானதல்ல. இத்தகைய தொடரமைப்பு சில சமயங்களில் பொருட் குழப்பத்தை உண்டாக்கும். இதற்குக் காரணம் வினைமுற்று இயல்பாக அமைவது மரபு. இந்தக் கட்டுப்பாட்டை மீறும்போது கருத்துப் பரிமாற்றம் தடைப்படும்.

**புலி கொல் யானை**

என்ற தொடருக்குப் புலி யானையைக் கொன்றது என்றும் யானை புலியைக் கொன்றது என்றும் இரு பொருள்கள் உண்டு. இவ்விரண்டு புற அமைப்புகள் கிடைக்க வெவ்வேறு மாற்றல் விதிகள் தேவைப்படுகின்றன. அதாவது இவற்றைப் பெறுவதற்கு இரு அக அமைப்புகள் தேவைப்படுகின்றன. இவ்வக வாக்கியங்களே வாக்கியங்களைப் பெறுவதற்கான கட்டுப்பாடுகளாகவும் அமைகின்றன. சில மாற்றல் விதிகளின் அக அமைப்பில் இடம் பெறும் ஒரே மாதிரியான சொற்கள் இரண்டும் ஒருமை வினைமுற்றுகள். இவற்றில் ஒன்று நீக்கப்படுவதற்கும் இரண்டும் சேர்ந்து பன்மையாக்கப்படுவதற்கும் அவ்வக அமைப்புகளிலுள்ள எழுவாய்த் தொடர் காரணமாக அமைகிறது.

**இராமன், கண்ணன் வந்தான் வந்தான்**

என்ற அக அமைப்பு உம் சேர இராமனும் கண்ணனும் என்றாகி, பின்னர் வந்தான் + வந்தான் என்ற வடிவம் இரண்டும் சேர்ந்து வந்தார்கள் என்ற வடிவம் பெற்று, தேவையான புற வடிவம் கிடைக்கிறது. (ஏனெனில் எழுவாய்த் தொடரில் இரண்டு எழுவாய்கள் இருப்பதால் வினைமுற்று பன்மையாக்கப்பட வேண்டும்)

## மாற்றிலக்கணத்தில் பொருண்மையின் பங்கு

மாற்றிலக்கணத்தில் அமையும் பிரிவுகளுள் தொடரிலக்கணம் சொற்களஞ்சியம் அகபுற அமைப்புகள், மாற்றல் விதிகள் போன்றவை மிக முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் தம்முள் நெருங்கிய தொடர்பு கொண்டவை. இத்தொடர்புகளை விளக்கும்போது நமக்குப் பொருண்மை பற்றிய விளக்கம் கிடைக்கிறது. தொடக்க காலத்தொடரியல்

இலக்கணங்களில் பொருண்மையின் அமைப்பு சிறப்பிடம் வகிக்கவில்லை. ஆனால் 1965–ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றிலக்கணக் கோட்பாடுகளில் பொருண்மைக்கூறு புதிய இடத்தைப் பெற்றது. அதாவது தனி வாக்கியங்களை இணைத்துப் பல்வேறு கலப்பு மற்றும் கூட்டு வாக்கியங்களை உருவாக்கும்போது மாற்றல் விதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் அக அமைப்பு என்று ஒன்று கட்டப்படுகிறது. அக அமைப்பை விளக்குவதற்குப் பொருண்மை விளக்கம் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

இராமன் வந்தான்.

இராமன் சென்றான்.


என்ற தனி வாக்கியங்கள் இணையும்போது இரு வகையான புற அமைப்புகள் கிடைக்கின்றன.

1) இராமன் வரவும் செல்லவும் செய்தான்


2) இராமன் வந்து சென்றான்

முதல் வாக்கியத்தில் இராமன் செய்யும் செயல்கள் பொதுவாகச் சொல்லப்படுகின்றன. இரண்டாவது வாக்கியத்தில் இராமன் செய்யும் ஒரு செயல் முன்னர் நடைபெறுவதும் அதனையடுத்து சிறிது கால இடைவெளிக்குப்பின் இரண்டாவது செயல் நடைபெறுவதும் காட்டப்படுகிறது. அதாவது,

இராமன் வந்து பிறகு சென்றான் (சிறிது நேரம் தங்கிய பின்/ வந்து தன் பணியை முடித்த பின் சென்றான்) இங்கு பொருண்மை விளக்கம் சிறப்பிடம் வகிக்கிறது. பொருண்மை விளக்கத்தில் பொருண்மைத் தொடர்புகள் முக்கியமானவை. எனவே, பொருண்மையியல் மாற்றிலக்கணத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது பின்பற்றப்பட்டு வரும் மாற்றிலக்கணக் கோட்பாட்டில் மூன்று பகுதிகள் உள்ளன.





மாற்றிலக்கணத்தின் ஒரு பகுதியான தொடரியலில், தொடரமைப்பு விதிகள் மிக நுண்ணிய குறியீடுகளைத் தோற்றுவிக்கின்றன. சொல் விதிகள் சொற்களைச் சொற்களஞ்சியத்திலிருந்து பெறுகின்றன. இதுவே, அக அமைப்பு, இந்த அக அமைப்பின் மீது பொருண்மை இயல் பகுதி செயற்பட்டு வாக்கியத்திற்குப் பொருள் இலக்கணம் அளிக்கின்றது.




இவ்வக அமைப்பின் மீது மாற்றல் விதிகள் மற்றொருபுறம் செயல்படுகின்றன. இதனால் புற அமைப்பு நமக்குக் கிடைக்கிறது.

இறுதியில் ஒலியனியல் பகுதி புற அமைப்பை வடிவமைக்கிறது. ஆகவே அக அமைப்பு பொருண்மையியல் பகுதியோடு ஒன்றிச் செல்வது மிகவும் இன்றியமையாதது.

**தொடரியல் பகுதி**




இவ்வாறு செவ்வியல் கோட்பாடு 1965 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிறிது சிறிதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்தது.

✧ ✧ ✧